15th March 1966]

type of fever among the students resulting in the death of two of them; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) On account of the prevalence of a severe type of fever and on the advice of the Municipal and Health Officers, the school had to be closed from 1st September 1965 to 12th September 1965 instead of from 11th September 1965 to 20th September 1965 for mid-term holidays. One local student died of diarrhoea on 30th August 1965 in her residence and the other passed away on 4th September 1965 during the holidays.

திரு. வை. சங்கரன் : இந்த இறந்துபோன இரண்டு பேர்களுடைய கேஸ்களிலும் விரைவாக டயக்னேசிஸ் செய்து காலா காலத்தில் மருந்து கொடுக்கப் படவில்லை என்று கூறப்படுவது வாஸ்தவமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது சரியல்ல.

முதியோர் கல்வி

* 301 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :
திரு. வை. சங்கரன் : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முதியோர் கல்விக்காக புதிய திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில் அதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வை சங்கரன் : கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில், அவர்களுக்கு ஒரு சீலிங், மாக்சிமம் வயது, 45 என்று, அதற்கு மேல் போகக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? அடல்ட் எஜுகேஷன் என்று வரும்போது, கீழே வரையறை வைப்பது சரியாக இருக்கலாம். ஆனால், மேல் வரையறை வைப்பது சரியல்ல. அதற்குக் காரணம் என்ன என்று கூறமுடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதியோர்களுக்குக் கல்வி புகட்டுவது என்பதுதான். ஓரளவாகிலும் எல்லோருக்கும் கல்வி பயில வசதி கொடுக்க வேண்டும் என்பதுதான் நோக்கம், அது தான் முக்கியம். பலன் பரவலாகக் கிடைக்க வேண்டும் என்று தான் 45 வயது என்று வைக்கப்பட்டிருக்கிறது.

---

a 340-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[15th March 1966

திரு. வை. சங்கரன் : சார் முதியோர் கல்விக்கூடங்களை நடத்த முன்வரும் தனியார் ஸ்தாபனங்களுக்கு, சங்கங்களுக்கு சர்க்கார் உதவி அளிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மேசை மீது வைக்கப்பட்டிருக்கும் திட்டப்படி, அதன் கீழ் ஆதரவு அளிக்க முடியும் என்றால் அது கவனிக்கப்படும்.

திரு. செ. மாதவன் : சார், இப்பொழுது 175 பள்ளிகளுக்கு முன்னோடித் திட்டமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் எத்தனை திறக்கப்பட்டுள்ளன, அவற்றிற்கான செலவு என்ன என்று அறிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, முதியோர் கல்வி அளிக்கும் முறை ஒரு தனிப்பட்ட முறையா, அல்லது மற்ற பள்ளிகளில் பின்பற்றப்படுகின்ற முறையையே கையாளுகிறார்களா? தனிப்பட்ட முறை என்றால், அந்த முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைத் தயாரிக்க வழிவகை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆங்காங்கே உள்ள வசதிகளைக் கவனத்தில் கொண்டு, இது செய்யப்படுகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், முதியோர் பாடத் திட்டங்களை, முதியோர்களே தயாரிக்கிறார்களா ? அது எந்தவிதமான திட்டம் என்று அறிவிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏதோ குறிப்பிட்ட பாடத் திட்டம் என்று கூற மாட்டேன். ஓரளவு இவற்றை நிபுணர்கள் தான் தயாரித்திருக்கிறார்கள்.

திரு. வை. சங்கரன் : முதியோர் கல்வி எவ்வளவு தூரம் நன்மை கொடுக்கிறது, முதியோர் எவ்வளவு தரம் அடைந்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள, அதற்கு அவர்கள் ஓரிரண்டு ஆண்டுகள் படித்தபின் பரிட்சை, பரிசோதனை ஏதாவது வைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலிலே அவர்கள் படிக்க வசதி செய்து, அவர்கள் அறிவு பெற வழிவகை செய்யவேண்டும். அவர்கள் புத்தகங்களைப் படிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். பரிட்சை முக்கியம் இல்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

MADRAS LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS